# 2

# கிறிஸ்து: தேவனுடைய குமாரன்

*“நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?” என்று தமது சீஷர்களிடத்தில் இயேசு கேட்டபோது. அதற்கு பதிலளித்த பேதுரு, “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்றார் (மத்தேயு 16:15, 16). இயேசுவைக் குறித்த அதி முக்கியமான உண்மைகளை பேதுரு வார்த்தைகளால் இங்கு வெளிப்படுத்துகிறார்: இயேசு தெய்வீகம் நிறைந்த தேவனுடைய குமாரனாக இருந்தார், இருக்கிறார்! அவர் மாம்சத்தில் வந்த தேவன், தெய்வீகம் நிறைந்தவராயிருந்தார், இருக்கிறார்.*

*நாம் இயேசு “கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்” பிரசங்கிக்கும்போது, பேதுரு அறிக்கையிட்ட பெரிய சத்தியத்தை நாம் விசுவாசித்து அதைப் பிரசங்கிக்க வேண்டும். ஏன்? பேதுருவின் அறிக்கையிலிருந்த உண்மையை நாம் பிரசங்கிக்க வேண்டும் ஏனெனில் புதிய ஏற்பாட்டுப் பிரசங்கியார்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்ற உண்மையையே அறிவித்தார்கள். பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கித்தபோது, தேவன் இயேசுவை “ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்” என்று சொன்னான் (நடபடிகள் 2:36). இயேசுவை “கர்த்தர்” என்று சொல்லுவது அவருடைய தெய்வீகத்தையும் அறிக்கையிடுவதாகும். சவுல் (பவுல்) மனமாற்றப் பட்டவுடனே, “ஜெப ஆலயங்களில் ‘இயேசு தேவனுடைய குமாரன்’ என்று பிரசங்கித்தார்” (நடபடிகள் 9:20).*

## கிறிஸ்தவத்திலுள்ள அதிமுக்கியமான உண்மை

*கிறிஸ்து உண்மையாகவே தேவனுடைய குமாரனாக பூமியில் வாழ்ந்தது உண்மையானால், பிறகு வேதம் அவரைப் பற்றிச் சொல்லுகிற மற்ற அனைத்துமே உண்மையானது. உண்மையில் சொன்னால், இயேசு தேவனுடைய குமாரனேயானால், பிறகு வேதத்திலுள்ள மற்ற யாவும் உண்மையானது. திருமறை சொல்லும் சத்தியத்தின் மையக் கருத்து இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார், இருக்கிறார்.*

### ஏன் அநேகர் விசுவாசிப்பதில்லை

*அநேகர் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதில் லை. கிறிஸ்தவமில்லாத மதகொள்கையைக் கைக்கொண்டிருப்பவர்களைப் போலவே (யூத மார்க்கம், இஸ்லாமியம், இந்துமதம், புத்தமதம் போன்றவை) தெய்வ நம்பிக்கையற்றவர்கள், கடவுள் இருக்கிறார் ஆனால் நிரூபிக்க இயலாது என்போர், பொருள்வாதக் கொள்கையுடையோர், மனுஷீகத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டு இயேசுவின் தெய்வீகத்தை விசுவாசிப்பதில்லை.*

கூடுதலாக, அநேக கல்வி வல்லுனர்கள் இயேசுவை வரலாற்று நாயகனாக ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அவரது தெய்வீகத்தை புறம் தள்ளுகின்றனர். உதாரணமாக, ஒரு சுயாட்சி - கல்லூரி ஒன்றில் மார்க்க சுதந்தரவாதிகளான கல்விமான்கள் தங்களை "இயேசுவின் கருத்தரங்கு" என அழைத்துக் கொண்டு வரலாறு கூறும் "உண்மையான" இயேசுவை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினர். (எதிர்பார்த்தபடியே) அவர்கள், இயேசுவைப் பற்றி என்ன சொல்லப் பட்டாலும், அவரைப் பற்றி சுவிசேஷங்கள் சொல்வது மட்டும் உண்மையல்ல என்று முடித்துக்கொண்டனர்.

கிறிஸ்துவை விசுவாசிப்பதாகக் கூறிக் கொள்ளும் சில ஜனங்கள் கூட உண்மையில் இயேசுவின் தெய்வீகத்தை மறுதலிக்கின்றனர்.[1] 1960 களில் அச்சிடப்பட்ட ஒரு செய்திதாளில் கீழ்வரும் வாக்கியங்கள் அச்சியப்பட்டிருந்தன:

- வசன வல்லுனர் லெண்டர் கெக், வன்டெர்பில்ட் பல்கலைக் கழகம்: "கஷ்டம் என்னவென்றால் 'தெய்வீகமாயிருப்பது' என்றால் என்ன என்று நமக்குத் தெரியாது."
- பிரான்சிஸ்கன் இறையியல் துறைத் தலைவர், புரூக்லினின் பிரான்சிஸ் கல்லூரி: "இயேசுவின் தெய்வீகம் குறித்து சபை ஒருபோதும் விளக்கமளிக்கவில்லை. இயேசு தாம் தெய்வம் என்ற எண்ணமில்லாமல்தான் இருந்திருப்பார் என்று நான் உறுதியாய் நம்புகிறேன்."
- நாட்ரி டேம் பல்கலைக் கழக இறையியல் பேராசிரியர் ஜான் டன்னே: "இயேசு … தாம் தெய்வீக குமாரன் என்ற கருத்தில் அவர் நிச்சயமற்றிருந்தார், இருப்பினும் நிச்சயப்படுத்திக்கொள்வதில் இருந்த ஆர்வத்தை ஒருபோதும் கைவிடவேயில்லை."[2]

இந்த விளக்கங்கள் அவைகளைச் சொன்ன இறையியல் பேராசியர்கள் சுவிசேஷத்தின் ஒளிவு மறைவற்ற எளிய போதனைகளை புறக்கணித்தனர் என்று சுட்டிக்காட்டுகின்றன.

திருமறையின் அதிகாரத்தையும் சரியானதென்ற நிலைப்பாட்டையும் ஏற்றுக் கொண்டுள்ளோர், கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் கூட்டத்து ஜனங்களை வலிமையாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. இயேசு கிறிஸ்துவைக் குறித்து, பின்வருமாறு வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன: (1) முழு நித்தியத்திலும் அவர் இருக்கிறார். தேவனோடு இருந்தார், இருக்கிறார், தேவனுடைய குணாதிசயங்களைக் கொண்டிருக்கிறார், எல்லாவற்றையும் சிருஷ்டித்த செயல்களில் அவருக்கும் பங்கு உண்டு. (2) அவர் கன்னிகையினிடத்தில் பிறந்தார். (3) அவர் அற்புதங்களைச் செய்தார். (4) அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று உரிமை கொண்டாடினார், தேவனும் அவரைத் தம்முடைய குமாரன் என்று சொன்னார். (5) அவர் மரித்தார், ஆனால் மரித்ததிலிருந்து உயிரோடெழுப்பப்பட்டார். (6) அவர் பரமேறிச் சென்றபின்பு இப்பொழுதும் உயிரோடிருக்கிறார், பரலோகத்தில் மகிமை பொருந்தினவராய் வீற்றிருக்கிறார்.

**நாம் ஏன் விசுவாசிக்கிறோம்**

*இந்த உபதேசங்களை நாம் ஏன் விசுவாசிக்கிறோம்? இயேசுவை விசுவாசிக்க நமக்குள்ள காரணங்கள் யாவை?*

*இயேசு ஈடு இணையற்ற வாழ்க்கையை வாழ்ந்தார்.* முதலாவதாக, அவருடைய வாழ்க்கை தீர்க்கதரிசன நிறைவேற்றங்களிலே நிகரற்றதாயிருந்தது. உதாரணமாக, மேசியா கன்னிகையினிடத்தில் பிறப்பார் என்ற தீர்க்கதரிசனங்களை அவர் நிறைவேற்றினார் (மத்தேயு 1:22, 23; ஏசாயா 7:14); பெத்லகேமில் பிறப்பார் (மத்தேயு 2:5, 6; மீகா 5:2); தாவீதின் சந்ததியில் வருவார். தாவீதின் சிங்காசனத்திலிருந்து ஆளுகை செய்வார் (லூக்கா 1:32. 33); சிலுவையில் அறையப்படுவார் (சங்கீதம் 22:16). இந்தத் தீர்க்கதரிசனங்களில் சிலவற்றில் தேவனுடைய செயலும் இருந்திருந்தால் மட்டுமே நிறைவேறியிருக்க முடியும்.[3]

இரண்டாவதாக, இயேசுவின் பாவமற்ற ஜீவியம் நிகரற்று விளங்கியது (எபிரெயர் 4:15). அவருடைய ஜீவியத்தில் ஒருவரும் எந்த குற்றத்தையும் காணமுடியவில்லை.

மூன்றாவதாக, நமது கர்த்தருடைய ஜீவியம் அவருடைய நற்குணத்தில் நிகரற்றது. ஹென்றி H. ஹாலே பின்வருமாறு எழுதினார்.

> மனுஷீகத்திலே, மிகவும் வியத்தகு வகையில் அழகிய ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் மட்டுமே, உச்சக்கட்ட இரக்கம்,ஆழமான மனதுருக்கம், மிகுந்த சாந்த குணம், மிகுந்த பொறுமை, அதிகபட்ச காருண்யம் கொண்டவராய் எப்பொழுதும் வாழ்ந்திராத ஒரே மனுஷன் இவர்தான். அவர் ஜனங்களிடத்தில் அன்புகூர்ந்தார். உபத்திரவத்தில் ஜனங்கள் வாழ்வதை அவர் வெறுத்தார். அவர் மன்னிக்க விரும்பினார். உதவி செய்ய மிகவும் விரும்பினார். பசியுள்ளோரை போஷிக்க வியக்கத் தக்க அற்புதங்களைச் செய்தார். உபத்திரப்படுபவர்களின் நிவாரணத்துக்காக தாமே அப்பம் புசியாமலிருந்தார். திரளானவர்களும், களைப்பு அடைந்து விடாய்த்துப் போனவர்களும்,மனவேதனை மிகுந்தவர்களும் இருதய - வலியுள்ளவர்களும், அவரிடத்தில் வந்து, சுகத்தையும் விடுதலையையும் கண்டடைந்தார்கள். வேறு யாரையும் குறித்தும் சொல்லாமல், அவரைக் குறித்து மட்டுமே, அவர் செய்த எல்லா அன்பின் காரியங்களையும் எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாது என்று சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட மனுஷனாகத்தான் இயேசு வாழ்ந்தார். தேவனும் இப்படிப்பட்டவர்தான்.[4]

இயேசுவின் குணாதிசயங்களை யார் கண்டுபிடித்திருக்க இயலும்? அவருடைய போதனையும் வாழ்க்கையும் உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்க கூடியவைகளாய் இருந்தபடியால், யாரும் கண்டுபிடிக்க விரும்பியிருக்க மாட்டார்கள். கண்டுபிடிக்க யாரும் முயற்சித்திருந்தாலும் கண்டுபிடித்திருக்க முடியாது. கற்பனைக் கெட்டாத வகையில் அவர் அன்றாட பழக்க வழக்கங்களில் மிகவும் மாறுபட்டவராயும், "நடைமுறைக்கு" அவர் மிகவும் அப்பாற்பட்டவராயுமிருந்தார். அவர் இருந்தே இருக்க வேண்டும்; தாம் யாரென்று சொன்னாரோ அவராக அவர் இருந்திருக்க வேண்டும்.

*இயேசு நிகரற்ற போதனைகளை முன்வைத்தவர்.* அவருடைய

போதனைகளை கேட்போரில் சிலர், ‘‘அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை’’ என்றார்கள் (யோவான் 7:45, 46; RSV). நூற்றாண்டுகளாக மேற்கொண்ட ஆராய்ச்சி அதை நிரூபித்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் போதனைகள் மனிதனுடைய ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை. எனவே நிக்கொதேமுவுடன் சேர்ந்து நாமும், இயேசு “தேவனிடத்திலிருந்து வந்த போதகர்,” என்ற முடிவுக்கு வருகிறோம் (யோவான் 3:2; RSV).

*இயேசு வியக்கத்தக்க உரிமைகோரலை வெளியிட்டார்.* அவர் ஒருபோதும் தமது தெய்வீகம் குறித்து உரிமை கோரவில்லை என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால் பின்வரும் வசனங்களில் அவர் அப்படிச் செய்தார் என்பதை கண்ணுறுகிறோம்:

1. “*நானே அவர்* என்று விசுவாசியாவிட்டால் நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்” என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 8:24ஆ; வலியுறுத்துதல் என்னுடையது). இதிலே குறிப்பிடப்படும் “அவர்” எனும் பதம் மூலபாஷையில் இல்லாதபடியால் (ஆங்கிலத்தில்) வலதுபுறம் சாய்வாகக் காணும் (இட்டாலிக்) எழுத்துக்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தச் சொல்லை பயன்படுத்துவதன் மூலம் இயேசு யாத்திராகமம் 3:14ல் “நானே அவர்” என்று குறிப்பிடப் பட்டது தம்மைக் குறித்துதான் என்று இயேசு சொல்லுகிறார்.

2. யோவான் 10:28-38ல், இயேசு தம்மை தேவன் என்று சொன்னதினாலே தேவதூஷணம் பேசுவதாக குற்றஞ் சுமத்தப்பட்டார் (யோவான் 10:33). இயேசு தம்மை தேவன் என்று சொன்னதாக சாட்டிய குற்றச்சாட்டை இயேசு மறுக்கவில்லை, மாறாக அப்படியொரு உரிமைகோரலை வெளியிட தமக்கு அதிகாரம் இருப்பதாக நியாயப்படுத்தி பேசினார்.

3. யோவான் 8:58ல் தாம் ஆபிரகாமுக்கு முந்தினவர் என்று இயேசு சொன்னார்; நித்திய ஜீவியான ஒருவரே இப்படிப்பட்ட வாக்கியத்தையைச் சொல்லி தம்முடைய கருத்தை நியாயப்படுத்தியிருக்க முடியும்.

4. திமிர்வாதமுள்ள ஒரு மனுஷனை சொஸ்தப்படுத்தியபோது, அவர் சொன்னார், ‘‘மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது,’’ என்று சொன்னார் (மாற்கு 2:5), யூத மதத்தலைவர்களுக்கு அது நெருக்கடியை உண்டுபண்ணியதால், பாவங்களை மன்னிக்க தேவன் ஒருவருக்கே அதிகாரம் உண்டு என்றார்கள் (மாற்கு 2:7). அவர்களுடைய குற்றச் சாட்டுகளுக்கு பதில் அளித்து, பாவங்களை மன்னிக்க தேவன் ஒருவருக்கு மட்டுமே அதிகாரமுண்டு என்பதை மறுக்கவில்லை; இருந்தும், ‘‘பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு” என்று உறுதிப்படுத்தினார் (மாற்கு 2:10). ஆகையால், தேவனுக்கு மட்டுமே இருக்கிற அதிகாரம் தமக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

5. பிரதான ஆசாரியன் இயேசுவை பார்த்து, “நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?’’ என்று கேட்டான். அதற்கு இயேசு பதிலளித்து, ‘‘நான் அவர்தான்’’ என்று சொன்னார் (மாற்கு 14:61, 62). அவர் ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரன்தான் என்று அறிக்கையிட்டதினால், இயேசு தாமே தம்மை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தார்.[5]

இயேசு தம்மை தெய்வீகமானவர் என்று சொன்ன காரியம்

அவிசுவாசிகளுக்கு ஒரு இக்கட்டான நிலையை உருவாக்கியது. இந்த உரிமை கோரும் வார்த்தையைக் குறித்து, அந்த அவிசுவாசி இயேசுவைக் குறித்து என்ன சொல்லக் கூடும்?

இயேசு சத்தியத்தைத்தான் பேசுகிறார் என்று அந்த அவிசுவாசி ஒத்துக்கொள்ளச் செய்ய ஒரு சாத்தியக்கூறு உண்டு. எப்படியிருப்பினும், இயேசு உண்மையை (சத்தியத்தை) சொல்லக் கூடியவராக இருப்பின், பிறகு அவர் தம்மை யார் என்று சொல்லுகிறாரோ அதுவும் உண்மையாகத்தானே இருக்க வேண்டும்: வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராக தம்மைக் குறித்து அவர் பேசுவது உண்மைதானே. இயேசு சத்தியத்தையே பேசுகிறார் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அப்படி எண்ணி அவிசுவாசியாக இருக்கவும் முடியாது.

தர்க்க ரீதியாக எடுத்துக் கொண்டாலும், இரண்டாவது இயேசு பொய்யைப் பேசியிருக்க வேண்டும். அவிசுவாசி ஏறத்தாழ இந்த நிலைப்பாட்டை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயினும், இயேசு சத்தியத்தைச் சொல்லாமல், ஆனால் வேண்டுமென்றே பொய்யைச் சொல்லுவாரானால், அவர் போதித்த எல்லாவற்றிற்கும் எதிராகத் தானே அவரது நடத்தைகள் இருந்திருக்க முடியும். அவருடைய வாழ்க்கையைக் குறித்து நாம் அறிந்திருக்கிறவகையில் முரண்பட்ட வாழ்வைத்தானே அவர் முற்றிலும் வாழ்ந்திருக்க வேண்டும். இயேசு நல்ல மனிதரா? அவரைப் பற்றிச் சொல்லப்படுகிற எல்லாவற்றையும் பார்க்கும் போது, அவர் நல்லவர் என்றுதான் நாம் அறிகிறோம். அவர் பொய் சொல்லியிருந்திருப்பாரேயாகில் பிறகு அவர் நல்ல மனிதராக இருக்க முடியாது. முரண்பட்ட பொய்யும் மெய்யும் பற்றித்தாமே பொய்ச் சொல்லும் வினோதச் செயல் எப்படிசாத்தியமான முடிவெடுக்கச் செய்யும்?

மூன்றாவது சாத்தியக்கூறு என்னவெனில் இயேசு பொய் சொல்லவில்லை, ஆனால் தவறாக வழி நடத்தப் பட்டிருந்தார்: அவர் மெய்யாகவே தம்மை தேவனுடைய குமாரன் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தார், ஆனால் உண்மையில் அவர் அப்படியில்லை. இந்த சாத்தியக்கூறு ஒருவேளை அவிசுவாசியை வேண்டுமானால் திருப்திபடுத்தலாம் ஆகிலும் இயேசு தம்மைக் குறித்து சொன்னவைகளை நாம் அறிந்த வரையில் அவர் ஆரோக்கியமான மனபலமுள்ளவரும் ஞானமிக்கவரும், அவரது உபதேசங்களெல்லாம் உண்மை அடிப்படைகளைக் கொண்டிருந்தவை என்பதையும் நாம் அறிவோம். அவர் எதையும் குறித்து தவறான கண்ணோட்டத்தில் பேசியதில்லை; தாம் யார் என்பதைக் குறித்து அவர் ஏன் (புரியாத) தவறான கண்ணோட்டத்தில் பேச வேண்டும்? அடிப்படையில் இந்த மூன்றாவது சாத்தியக்கூறுகளை ஏற்றுக் கொள்கிறவர்கள் இயேசு பைத்தியகாரத்தனமாய் உளறுவது போல் பேசுவார்கள்! இதை நம்புவோர் யார்?

இன்னொரு வார்த்தையில் சொன்னால், இயேசுவின் உரிமைக் குரலின் வெளிச்சத்தில், அவர் ஆண்டவர், பொய்யர், அல்லது சித்தங்கலங்கினவர் என்று அவரைக் காணக்கூடும்! தன்னை அவிசுவாசியாகவே இருக்கத் தீர்மானித்தவன் வேண்டுமானால் அவரை பொய்யராகவோ சித்தங்கலங்கினவராகவோதான் காணமுடியும்! இந்த மூன்றில் நீங்கள் எந்த ஒன்றை விசுவாசிப்பீர்கள்?

<u>இயேசு அற்புதமான கிரியைகளை நடப்பித்தார்.</u> அந்த செயல்களெல்லாம் பிழையில்லாமல் வேதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுவிசேஷப் பதிவேடுகள்

இயேசு வியாதியஸ்தர்களை சுகமாக்கினார் என்றும், சில அப்பங்களாலும் மீன்களாலும் திரளானவர்களை அவர் போஷித்தார், தண்ணீர்மேல் நடந்தார், பிசாசுகளை விரட்டினார், புயலை அமைதிப்படுத்தினார், தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றினார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார் என்றும் சொல்லுகின்றன.

இயேசுவின் அற்புதங்களைக் குறித்து ஒருவரும் அவர் உயிரோடிருக்குங் காலத்தில் சந்தேகப் படவில்லை. அவருடைய சத்துருக்கள் கூட அவைகளை மறுதலிக்கவில்லை; அவர் சாத்தானின் வல்லமையைக் கொண்டு அற்புதங்கள் நிகழ்த்துவதாக மாத்திரமே குற்றம்சுமத்த முடிந்தது (மத்தேயு 12:24). லாசரு மரித்து நான்கு நாட்கள் கழித்து அவனை இயேசு எழுப்பினார்! அவனுடைய சரீரம் அழுகி நாற்றமெடுக்கத்துவங்கியிருக்கவேண்டும் (யோவான் 11:39), இருந்தும் லாசரு கல்லறையிலிருந்து உயிருள்ளவனாய் வந்தான். இந்த வல்லமையான அற்புதத்தை பொய்யாக்க அவருடைய எதிரிகள் லாசருவை மறுபடியும் கொன்றுபோடுவதால் சாட்சியத்தை அழிக்க முடியும் என்று மட்டுமே அவர்களால் எண்ணமுடிந்தது (யோவான் 12:9-11)! பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கித்தபோது, இயேசு "அற்புதங்களையும், அடையாளங்களையும், பலத்த செய்கைகளையும் நடப்பித்தார்" என்று பிரசங்கித்தார் (நடபடிகள் 2:22) - மற்றும் பேதுருவின் இந்த உறுதியாக பிரசங்கித்த வார்த்தைகளை யாரும் எதிர் பேசவில்லை.

இயேசு நிகழ்த்திய அற்புதங்கள் எதை நிரூபிக்கிறது? யோவான் சத்தியத்தை சுருக்கமாக:

> ... இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷர்களுக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றும் நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப் பட்டிருக்கிறது (யோவான் 20:30, 31).

இயேசுவின் அற்புதம் அவரை தேவனுடைய குமாரனென்று நிரூபிக்கிறது!

இயேசு மற்றவர்கள் மீது நிகரற்ற ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினார். ஏறத்தாழ எல்லாருமே அவர் குறிப்பிடத்தக்கவர் என்பதையும் கபடற்றவர் என்பதையும் ஒப்புக்கொண்டார்கள். அநேகர் அவரை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொண்டார்கள். யோவான் ஸ்நானன் அவரை "உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்பதாக குறிப்பிட்டார் (யோவான் 1:29). நத்தானியேல் தனது அறிக்கையில் "தேவனுடைய குமாரன், ... இஸ்ரவேலின் ராஜா" என்றான் (யோவான் 1:49). பேதுரு அவரை அறிக்கையிட்டு "ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று சொன்னார் (மத்தேயு 16:16). பிசாசுகளும் "அவர் தேவனுடைய குமாரன்" என்று அறிக்கையிட்டன (மத்தேயு 8:29). அவர் மரித்தபோது, சிலுவை அருகில் நின்று கொண்டிருந்த ஒரு நூற்றுக்கதிபதி ஆச்சரியப்பட்டு, "மெய்யாகவே இவர் தேவனுடைய குமரான்" என்றான்! (மத்தேயு 27:54). இயேசுவை பரியாசம் செய்த அவருடைய எதிரிகள் கூட அவர் சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கும்போது, "மற்றவர்களை இவன் இரட்சித்தான் ..." என்று சொல்லி ஒப்புக் கொண்டார்கள் (மத்தேயு 27:42).

தனிப்பட்ட நபர்களின் வாழ்வை சீர்படுத்தும் தாக்கம் இயேசுவிடம் இருந்தது. உபத்திரவங் கொடுத்தவனை அவர் மறுரூபப்படுத்தினார், என்பது இதற்கு உதாரணம். சவுல் பவுல் எனும் பிரசங்கியாராக மாற்றப்பட்டான்; அவர் "இடிமுழக்கத்தின் மகனாக" இருந்த யோவானை (காண்க மாற்கு 3:17), அன்பின் அப்போஸ்தலனாகும்படிச் செய்தார் (காண்க 1 யோவான் 4); தம்மை மூன்று முறை மறுதலித்த, பேதுருவை, விசுவாசத்திற்காக மரிக்கிற அளவுக்கு செயலூக்கம் கொடுத்தார் (காண்க யோவான் 21:19)![7] அப்போஸ்தவரின் மனமாற்றப்பட்ட வாழ்க்கை - கோழைகளாக இருந்த அவர்கள் தங்களுடைய கர்த்தருக்கென்று மரிக்க சித்தங் கொண்டிருந்தார்கள் - இயேசுவின் தெய்வீகம் குறித்த விஷயத்தில் ஒரு பலமான தர்க்க விஷயம் இது.

*இயேசுவின் செல்வாக்கு தொடர்கிறது.* யாரோ ஒருவர் இயேசுவின் பெரிதான செல்வாக்கை பின்வருமாறு விளக்கப்படுத்துகிறார்:

> மிகுந்த அறிவுக்கூர்மையுடையவர் வக்கீல் ஹென்றி ராஜர்ஸ், அவர் சில வருடங்களுக்கு முன்பாக "விசுவாசத்தின் கிரகணம்" என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தை எழுதினார், அதில் அவர் ஏதோ ஒரு வல்லமையுள்ள கரம் கிறிஸ்துவின் செல்வாக்கை அழித்து நமது சமுதாய பண்பாட்டிலிருந்து துடைத்துப் போட்டது போன்ற ஒரு கற்பனையை எழுதியிருந்தார். அவர் தனது சட்டப் புத்தகங்களைத் திருப்பிப்பார்த்தார், ஆகிலும் மனித மாண்பை பிடித்துவைக்கத்தக்க எந்த ஒரு சட்டமும் காணப்படவில்லை; குழந்தைகளின் உரிமை, ஏழைகள், மற்றும் கபடற்றோரின் உரிமைகளெல்லாம் மறைந்தோடிவிட்டன. முன்பு டாண்டே, மில்ட்டன், பிரவுனிங் மற்றும் டென்னிசன் ஆகியோரது இலக்கிய படைப்புகளின் பக்கத்தில் அவர் வெறுந்தாள்களை காண்கிறார். மருத்துவமனைகளும் அநாதை இல்லங்களும் காணாமல் போய் விட்டன. எழுத்தாளர்: "நான் இயேசு வந்திராத உலகத்தில் நான் வாழவிரும்பவில்லை" என்று புலம்பினார்.[8]

*இயேசு உயிர்த்தெழுந்தார்.* வரலாற்று உண்மைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது, இயேசு தாம் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதே. அவருடைய கல்லறை காலியாயிருந்தது. அது எப்படி சாத்தியம்?

1. இயேசுவின் விரோதிகள் அவருடைய சரீரத்தைத் திருடினார்களா? இல்லை. அப்படிச் செய்ய அவர்களுக்கு எந்தக் காரணமுமில்லை. அப்படிச் செய்ய விரும்பியிருப்பார்களானால், கல்லறைகளை காவல் காக்க வந்தவர்கள் அப்படிச் செய்யாமல் தடுத்திருப்பார்கள். விரோதிகள் இயேசுவின் மரித்த சரீரத்தை திருடியிருந்தால், இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கத் துவங்கினவுடனேயே அந்தப் பிரேதத்தை கொண்டு வந்து காட்டியிருப்பார்கள். அது கிறிஸ்தவம் துவங்குவதற்கு முன்பாகவே கிறிஸ்தவம் பரவுவதைத் தடுத்திருக்கும்.

2. இயேசுவின் நண்பர்கள் அவருடைய சரீரத்தை திருடிக் கொண்டு போயிருப்பார்களா? இல்லை. மறுபடியும், அவர்களும் அப்படிச் செய்ய காரணம் எதுவுமில்லை, கல்லறைக்கு சென்று எடுத்துவர காவலர்கள் தடை செய்திருப்பார்கள். இயேசுவின் பிரேதத்தை திருடியிருந்தால், அப்போது

*அவர்கள் பொய்யை பிரசங்கித்திருக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலை மனநெகிழ்ச்சியோடு பிரசங்கித்ததைப்போல மனுஷர்கள் ஒரு பொய்யை நம்பத்தகுந்த மாதிரி பிரசங்கித்திருக்க முடியாது. ஒன்றை பொய்யென்று அறிந்தும் அதற்காக மக்கள் மரிக்க முன்வர மாட்டார்கள். அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுதலைக் குறித்து தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்துக்காக மரித்தார்கள்.*

*3. இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்று அப்போஸ்தலர்கள் வெறும் கற்பனை பண்ணிக் கொண்டார்களா? அவர் உயிரோடிருப்பதை கண்டதாக கூறும் அளவுக்கும் அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் அவர் உயிர்த்தெழுந்து விட்டார் என்று விசுவாசிக்கும் அளவுக்கும் அவரின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்க விரும்பினர்களா? இல்லை. அவருடைய உயிர்த்தெழுதலை அவர்கள் விசுவாசித்திருக்க வேண்டிய நேரத்தில் அவர்கள் விசுவாசிக்கவில்லை. உண்மையில் அவர்களுக்கு இந்த விசுவாசம் தாமதமாகவே வந்தது. அவர்கள் பிரம்மைக்கு உட்பட்டு அந்த மனிதர்கள் பேசியதுமில்லை. இயேசு தாம் உண்மையாகவே உயிர்த்தெழுந்திருந்ததையும், அவருடைய சரீரம் மீண்டும் உயிர்பெற்றிருப்பதையும் விளங்கப் பண்ணினார்.*

*அந்த வெறுமையாக்கப்பட்ட கல்லறையைக்குறித்து நியாயமான ஒரே ஒரு காரணத்தை மட்டுமே சொல்ல முடியும். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார்! அவரது உயிர்த்தெழுதல் அவரது தேவத்துவத்திற்கு நிரூபணமாக இருக்கிறது. கிறிஸ்து, "உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் நிரூபிக்கப்பட்ட தேவகுமாரனாயிருக்கிறார்" என்று பவுல் கூறினார் (ரோமர் 1:4).*

*இயேசு தேவனாலே சாட்சியிடப்பட்டார்.* *இயேசு தம்முடைய குமாரன் என்பதை இரண்டு நிகழ்ச்சிகளின் மூலம் பரலோகத்திலிருந்து தேவன்பேசி உறுதிப்படுத்தினார் (மத்தேயு 3:17; 17:5; மேலும் காண்க யோவான் 12:27, 28). இயேசு தமது குமாரன் என்று தேவன் சாட்சியிட்ட காரியம் இந்த விஷயத்துக்கு முற்றுபுள்ளியிடவேண்டும்.*

*இந்த எல்லா காரணங்களினாலும், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந்தார், குமாரனாயிருக்கிறார் என்று நாம் விசுவாசிக்க முடியும். அவர் தெய்வீகம் நிறைந்தவராயிருந்தார், இருக்கிறார்; அவர் தேவத்துவமாக இருந்தார், மற்றும் இருக்கிறார்!*

## ஜனங்களிடம் மிகவும் குறிப்பிடத்தக்க விசுவாசம் தேவை

*ஜனங்கள் விசுவாசிக்கப் பிறந்தவர்கள். அவர்கள் சிலவற்றை விசுவாசிக்கிறார்கள். தேவனை விசுவாசிக்கும்படி தெரிந்து கொள்ளாவிட்டாலும் அல்லது ஏதோ ஒரு தேவர்களிடத்தில் விசுவாசம் வைக்காவிட்டாலும் வேறு ஏதோ ஒன்றில் விசுவாசம் கொண்டுள்ளனர். ஒருவேளை அவர்கள் விஞ்ஞானத்துக்கோ அல்லது மனிதனுக்கோ உயர்ந்த வலிமை மிக்கவைகள் என்ற எண்ணத்தில் முழங்காலிடலாம். ஆகிலும், கிறிஸ்துவில் அவர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதே எல்லா விசுவாசத்திலும் குறிப்பிடத்தக்கது. கிறிஸ்துவைப் பற்றி விசுவாசிக்க நாம் எடுக்கும் முடிவு தான் நாம் இந்த பூமியிலே எப்படி*

*வாழ்கிறோம் இதற்குப்பின்பு வாழ்வோமா அல்லது சாவோமா என்பதைத் தீர்மானிக்கும்! இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று வைக்கும் அவசியமான விசுவாசமே முடிவானது என்று திருமறை போதிக்கிறது.*

> *[இயேசு சொன்னார்,] "… நானே அவர் என்று விசுவாசியாவிட்டால், நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவான் 8:24).*
>
> *"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).*
>
> *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16).*
>
> *அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் (யோவான் 1:12).*
>
> *[பவுலும் சீலாவும்] சொன்னார்கள், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (நடபடிகள் 16:31).*

*நீங்கள் ஏற்றுக் கொள்ளும் அனைத்து கருத்துக்களிலும், இப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கும் என்றென்றும் இரட்சிக்கப்பட்டிருக்கவும் ஒரு சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்க வேண்டும், அது வேதம் சொல்லும் கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்து - பெத்லகேமிலே பிறந்தார், நாசரேத்தில் வளர்ந்தார், எருசலேமிலே சிலுவையின்மேல் அறையப்பட்டார் - தேவனுடைய தெய்வீக குமாரனாக இருந்தார், இருக்கிறார்!*

## ஜனங்கள் செய்ய வேண்டிய மிகவும் தீர்வுக்குரிய அறிக்கை

*இயேசுவை நம் இருதயங்களில் விசுவாசித்தால் மட்டும் போதாது, ஆனால் நாம் விசுவாசிக்கிறோம் என்பதை நம்முடைய வாய்களினால் அறிக்கை சொல்லவும் வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல்,*

> *… கர்த்தராகிய இயேசுவை உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதி உண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும் என்றார் (ரோமர் 10:9, 10).*

*பேதுரு செய்த அறிக்கையைப் போலவே நாமும் இரட்சிக்கப்பட வேண்டுமானால் அறிக்கை செய்ய விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும்!*

*அநேகமாக இயேசு தேவனுடைய குமாரன் என்று செய்யும் அறிக்கை தான் தீமோத்தேயு இரட்சிக்கப் பட்டபோது செய்த "நல்ல அறிக்கை"யாக இருந்திருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 6:12). அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான் என்றார் (1 யோவான் 4:15).*

*இயேசுவை நீங்கள் தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தால், ஆனால் அந்த விசுவாசத்தை உங்களுக்குள்ளேயே வைத்துக் கொண்டு நீங்கள் விசுவாசத்தை ஒருவருக்கும் சொல்லாமல் வைத்துக் கொண்டிருந்தால், பிறகு உங்களுடைய விசுவாசம் எதையும் சாதிக்கப் போவதில்லை. இயேசு சொன்னார், "மனுஷருக்கு முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவளை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத்தேயு 10:32, 33).[9]*

*பூமியிலே கிறிஸ்துவை அறிக்கை செய்யாதோர் ஒருநாள் அறிக்கை செய்யப் போகிறார்கள்! கிறிஸ்து வரும்பொழுது, "முழங்கால் யாவும் முடங்கும். ... இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்" (பிலிப்பியர் 2:10, 11) - ஆகிலும் அந்த மாபெரும் கடைசி நாளில் அறிக்கை செய்ய காத்தி ருப்போருக்கு அந்த நாள், இரட்சிப்பிலே நிறைவடையாது!*

## *முடிவுரை*

*பேதுரு இயேசுவினிடத்தில், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து," என்று சொன்னார். அவர் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு உண்மையையும், நாம் அடைந்திருக்க வேண்டிய ஒரு விசுவாசத்தையும் நாம் உரிமைகோரும் ஒரு அறிக்கையையும் பேதுரு அறிவித்தான். நமக்கு உள்ள கேள்வி "கிறிஸ்துவைக் குறித்து பேதுரு என்ன நினைத்தார்?" என்பதல்ல இயேசு சொன்னது போல கேள்வியெல்லாம், "கிறிஸ்துவை குறித்து* ***நீங்கள்*** *என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்?" (மத்தேயு 22:42; வலியுறுத்துதல் என்னுடையது). பேதுருவைப்போல, நீங்களும் விசுவாசிக்கிறீர்களா? இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார், இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் நல்லது செய்கிறீர்கள். அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட விருப்பப் படுகிறீர்களா? இருப்பின், அது இன்னும் சிறந்தது. ஆகிலும் இது போதுமானதல்ல. கிறிஸ்துவில் உங்களுக்குள்ள விசுவாசத்தை அறிக்கை செய்வது போதுமானதல்ல.*

*உங்கள் விசுவாசம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வழி நடத்த வேண்டும். "பரலோகத்தில் என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 7:21). தேவனுடைய குமாரனில் இருக்கும் உங்கள் விசுவாசம் உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப நடத்தட்டும் (லூக்கா 13:3), மனுஷர்களுக்கு முன்பாக உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள் (ரோமர் 10:9, 10), மற்றும் கிறிஸ்துவுக்குள் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம்*

*பெற்றுக்கொள்ளுங்கள் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38). நீங்கள் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியும்போது, நீங்கள் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களையும், நித்திய ஜீவனுக்காக நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வீர்கள்.*

---

குறிப்புகள்

[1]*இந்த வாக்கியம் "நாமகரண" கிறிஸ்தவர்களுக்கு அதின் சில பிரிவினருக்கு உண்மையாய் இருக்கலாம். ஆனால் இயேசுவின் தெய்வீகத்தைக் குறித்த முக்கியமான சத்தியங்களை மறுதலிக்கின்றனர்.* [2]"Easter 1966 - A Quest for the True Jesus," *Newsweek* 67 (11 April 1966): 72. [3]*உதாரணமாக, இயேசு எங்கே தாம் பிறப்பது, எப்படி அவர் மரிப்பது என்று அவராக தெரிந்து கொண்டிருக்க இயலாது.* [4]Henry H. Halley, *Halley's Bible Handbook,* 24th ed. (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1965), 20. [5]*உண்மையில், இயேசு தம்மை தேவனுடைய குமாரனென்று சொல்லியதால் சிலுவையில் அறையப்பட்டார். யூதமத தலைவர்கள் பிலாத்துவிடத்தில், "எங்களுக்கு நியாயப்பிரமாணம் உண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாக வேண்டும்" (யோவான் 19:7).* [6]Josh McDowell, *More Than a Carpenter* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 2004), 22-31 *எனும் புத்தகத்தில் இந்த தெரிவுகளே கொடுக்கப் பட்டுள்ளது;* C. S. Lewis, *Mere Christianity* (New York: Macmillan Co., 1952), 55-56 *எனும் புத்தகத்தில் இதே விவாதம் கொடுக்கப்பட்டுள்ளது.* [7]*பேதுரு ரோமாபுரியில் இரத்த சாட்சியாக மரித்ததாக பாரம்பரியம் சொல்லுகிறது. இந்த பாரம்பரியத்தை சந்தேகப்பட வேண்டிய காரணம் எதுவுமில்லை.* [8]Church bulletin, 29th and Yale Church of Christ, Tulsa, Oklahoma, 24 December 1964. [9]*கிறிஸ்துவை அறிக்கை செய்ய விருப்பமில்லாதவர்களுக்கு உதாரணமாக காண்க யோவான் 12:42, 43.*